**நீதித்துறை நடுவர் கூடுதல் மகளிர் நீதிமன்றம், ஈரோடு.**

**முன்னிலை :: திருமதி.R.அன்புச்செல்வி, M.B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர்,**
**கூடுதல் மகளிர் நீதிமன்றம்,**
**ஈரோடு.**

ஸ்ரீபராபவ வருடம் வைகாசி மாதம் 22-ம் நாள் வெள்ளிக்கிழமை
2026 ம் வருடம் ஜுன் மாதம் 05 ம் நாள் வெள்ளிக்கிழமை

Crl.M.P. No.1069/2026
in
Crl.M.P.No.648/2026

செந்தில் நாகராஜன் (41),
த/பெ.யுவராஜ்,
43, ராஜா கோபால் தோட்டம்,
2 வது தெரு, கருங்கல்பாளையம்,
ஈராடு- 638 003 ... மனுதாரர்/எதிரி

//எதிர்//

காவல் ஆய்வாளர்,
ஈரோடு கருங்கல்பாளையம் காவல் நிலையம்
குற்ற எண்.13/2026 ...எதிர்மனுதாரர் / குற்றம் முறையிடுவோர்

இம்மனு கடந்த 05.06.2026-ம் தேதியில் இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் / குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R. ஜெகதீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றத்தால் வழங்கும்,

R ANBUSELVI
Digitally signed by R ANBUSELVI
Date: 2026.06.05 13:07:32 +0530

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் பாரதிய நாகரிக் சுரக்ஸ சன்கிதா-2023, பிரிவு 187(3) ன் கீழ் மனுதாரர்களுக்கு / குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பிணை நிபந்தனை தளர்த்த வேண்டி மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிணை நிபந்தனையை தளர்த்தக்கோரி தாக்கல் செய்த மனு மற்றும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்/குற்றம் சாட்டப்பட்டவர் மீது பாரதிய நியாய சன்கிதா-2023 பிரிவுகள் 296 (b), 351 (2), BNS Act 2023 and 4 of TNPHW Act 2002 ன்-படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/குற்றம்சாட்டப்பட்டவர் தங்களது மனுவில், இந்நீதிமன்ற கு.ப.ம.எண்.648/2026-ல் தேதி 27.03.2026 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் ஈரோடு மாவட்டம் கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் கடந்த 10.04.2026 ம் தேதி முதல் 04.06.2026 தேதி வரை தினமும் காலை 10.00 மணிக்கு கையெழுத்து செய்து வருகிறார் என்பதாலும், மனுதாரர்/குற்றம்சாட்டப்பட்டவர் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்தி வருவதால் தற்சமயம் அவரால் தினமும் வேலைக்குச் செல்லமுடியாமல் இருப்பதாலும், ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவர் என்பதாலும், மனுதாரர்/குற்றம்சாட்டப்பட்டவரின் வருமானத்தை நம்பியே அவருடைய குடும்பம் இருப்பதாலும், மனுதாரர்/குற்றம்சாட்டப்பட்டவர் தினந்தோறும் காலையில் 10.00 மணிக்கு ஈரோடு மாவட்டம், கருங்கல்பாளைம் காவல் நிலையத்தில் கையெழுத்திட செல்ல வேண்டியிருப்பதால், தான் பார்த்து வந்த வேலையை செய்யமுடியாமலும், வருமானமில்லாமலும் அவர்களது குடும்பம் மிகுந்த கஷ்டப்படுவதாகவும், இவ்வழக்கில் வேறு வழக்குகள் எதுவும் நிலுவையில் இல்லை என்பதாலும், இவ்வழக்கில், இந்த நிலையில் மனுதாரர்/குற்றம்சாட்டப்பட்டவரை பிணையில் விட்டால் இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபடமாட்டார் என்றும், எனவே மனுதாரர்/குற்றம்சாட்டப்பட்டவர் மீதான பிணை நிபந்தனையை தளர்த்தக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது.

R ANBUSELVI

Digitally signed by R ANBUSELVI
Date: 2026.06.05 13:07:45 +0530

<u>தீர்வு:</u>

**மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மற்றும் அரசு தரப்பில் வழங்கப்பட்ட பதில் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. இங்கு தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரரால்/எதிரியால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட வேண்டுமா ?இல்லையா ? என்பதே ஆகும்.**

மனு மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்நீதிமன்ற கு.ப.ம.எண்.648/2026 தேதி 27.03.2026-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் ஈரோடு மாவட்டம் கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் கடந்த 10.04.2026 ம் தேதி முதல் 04.06.2026 தேதி வரை கையெழுத்து செய்து வருகிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்/குற்றம்சாட்டப்பட்டவர் தினந்தோறும் காலை 10.00 மணிக்கு ஈரோடு மாவட்டம் கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் கையெழுத்திட செல்ல வேண்டியிருப்பதால், அவரால் தினமும் வேலைக்குச் செய்யமுடியாமலும், வருமானமில்லாமலும் அவரது குடும்பம் மிகுந்த கஷ்டப்பட்டு வருவதாக கூறியுள்ளதை கருத்தில்கொண்டு மனுதாரர்/குற்றம்சாட்டப்பட்டவருக்கு இந்நீதிமன்ற கு.ப.ம.எண்.648/2026 ல் 27.03.2026 தேதியிட்ட உத்தரவில் விதிக்கப்பட்ட பிணை நிபந்தனையை தளர்த்தி, அதற்குபதிலாக மனுதாரர்/குற்றம்சாட்டப்பட்டவர் **எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் பிரதி வாரம் சனிக்கிழமை தோறும் காலை 10.00 மணிக்கு தவறாமல் ஆஜராகி இந்நீதிமன்றத்தால் மறு உத்தரவு பிறப்பிக்கும் வரை (Until Further Orders) கையெழுத்திடவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.**

**முடிவாக, இந்த மனுவானது இந்நீதிமன்றத்தால் பகுதியாக அனுமதிக்கப்பட்டு மனுதாரர்கள்/குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு இந்நீதிமன்ற கு.ப.ம.எண்.648/2026 ல் 27.03.2026**

R ANBUSELVI

Digitally signed by R ANBUSELVI
Date: 2026.06.05 13:07:54 +0530

**தேதியிட்ட உத்தரவில் விதிக்கப்பட்ட பிணை நிபந்தனையை பகுதியாக தளர்த்தி உத்தரவிடப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் நேரடியாக கணினியில் வைத்து பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 05-ம் நாள் வெள்ளிக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R ANBUSELVI

Digitally signed by R ANBUSELVI
Date: 2026.06.05 13:08:00 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
ஈரோடு.